Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.170/2021

Dated 26-02-2026
Deposition of witness for : PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயசூர்யா | வயது | : | 56 |
| தந்தை பெயர் | : | தம்பிஅய்யன் | தாலுக்கா | : | பட்டுக்கோட்டை |
| கிராமம் | : | சிவக்கொல்லை | தொழில் | : | விவசாயம் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

**Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போதுமேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன்.

2) என் மகன் பெயர் வெங்கடேஸ். அவர் 1996 ம் ஆண்டு பிறந்தார். அவர் பட்டுக்கோட்டையில் உள்ள பள்ளிக்கொண்டான் லாரல் பள்ளியில் 10 ம் வகுப்பு 2012 ம் ஆண்டு படித்தார்.

3) 25.09.2012 அன்று என் மகன் பள்ளிக்கு போய்விட்டு மாலையில் வீட்டிற்கு வந்தான். மாலையில் ஒரு மாதிரியாக இருந்தான். என்னவென்று கேட்டேன். அதற்கு பள்ளி இங்கிலிஸ் வாத்தியார் செல்வராஜ் என்னை திட்டிவிட்டார் என்றும் நீ படிப்பதற்கு லாயக்கு இல்ல நீபோய் சாவலாம் என்று வல்கராக திட்டிவிட்டதாகவும் அதனால் அவன் நண்பர்கள் எல்லாரும் சிரித்துவிட்டார்கள் என்றும் அவனுடன் படிக்கும் மாணவர்கள் அவனுடன் பேசவேண்டாம், பழகவேண்டாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த விபரத்தை என்னிடம் சொன்னான். நான் அவனிடம் நாளைக்கு பள்ளிக்கூடத்தில் வந்து பேசுகிறேன் என்று சொன்னான். அதற்கு அவர் நீங்க போங்கப்பா நான் பார்த்துகொள்கிறேன் என்று சொன்னான். என் மனைவியிடம் அவனுக்கு டீ போட்டு கொடுக்க சொல்லிவிட்டு பக்கத்தில் உள்ள பேப்பர் கப் கம்பெனிக்கு நான் போய்விட்டேன்.

4) பிறகு மாலை 6 மணியளவில் என் வீட்டின் பின்புறத்தில் இருந்து வெளிச்சம் வந்தது. நான் ஓடினேன். நானும் என் மனைவியும் ஓடிபோய் பார்த்தோம். என் மகன் வெங்கடேஷ் உடலில் மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்து எரிந்துகொண்டிருந்தான். அவனை அழைத்துக்கொண்டு பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.

5) அங்கு முதல் உதவி சிகிச்சைஅளித்தார்கள். பிறகு நீதிபதி வந்து அவனிடம் மரண வாக்குமூலம் வாங்கினார். அதற்கு பிறகு இரவு 12.30 மணிக்கு திருச்சி காவேரி மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். அங்கு சிகிச்சைஅளித்தார்கள். மறுநாள் காலை 10.50 மணிக்கு இறந்துவிட்டான். இறப்பதற்கு முன்பு என்னிடம் என் மகன்

வாத்தியையாரை விட்டுவிடாதிங்க அவர்தான் பிரச்சினை அவர் என்னை சாக சொன்னார் அதனால்தான் நான் செத்தேன். இதுபோல் வேறு யாருக்கும் நடக்ககூடாது என்று சொன்னான்.

6) பிறகு திருச்சி அரசு மருத்துவ மணைக்கு கொண்டுபோய் போஸ்ட்மார்ட்டம் செய்தார்கள்.

7) இது சம்பந்தமாக நான்புகார் கொடுக்கவில்லை. என் மகன் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமணையில் முதல் உதவி சிகிச்சை பெறும்போதுஅவனிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த வாக்குமூலத்தில்தான் வழக்கு போட்டார்கள். அவன் வாக்குமூலம் கொடுக்கும்போது போலிஸ், நீதிபதி, மருத்துவர், நான் மற்றும் என் குடும்ப உறுப்பினர்கள் இருந்தார்கள். அதில் என் மகன் கைரேகை வைத்தான்.

8) இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) காலையில் 8.30 மணிக்கு பள்ளி வேன் வரும். அந்த வேனில் போய்விட்டு மாலை 5.30 மணிக்கு வேனில் வீட்டிற்கு வருவார்.

2) லாரல் பள்ளி மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் 21.9.2012 முதல் 2.10.2012 வரை காலாண்டு விடுமுறை என்றால் இல்லை.

3) லாரல் பள்ளி மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளும் காலாண்டு விடுமுறை முடிந்து 3.10.2012 அன்றுதான் எல்லா பள்ளிகளும் தமிழ்நாட்டில் திறக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

4) 25.09.2012 அன்று லாரல் பள்ளிக்கு காலாண்டு விடுமுறை என்றும் அப்போது பள்ளி நடைபெறவில்லை என்றும் சொன்னால் இல்லை. பள்ளி இருந்தது.

5) பொதுவாக பள்ளி விடுமுறை விட்டு பள்ளி திறக்கும்போதுதான் மார்க்சீட் கொடுப்பார்கள் என்று சொன்னால் சரிதான். லாரல் பள்ளி காலாண்டு முடிந்து 3.10.2012 அன்றுதான் திறந்தார்கள் என்றும் அதற்குபிறகுதான் மார்க்சீட் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

6) என் மகனின் வெங்கடேஸின் இதற்கு முன்பு நடந்த மாதாந்திர தேர்வுகளின் என் மகனின் வெங்கடேஸின் மார்க் சீட் பார்த்து உள்ளீரா என்றால் இல்லை.

7) 25.09.2012 அன்று லாரல் மேல் நிலை பள்ளி இயங்கியது என்பதை காட்டுவதற்கு ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

8) என் மகன் வெங்கடேஷ் படித்த வகுப்பில் 40 மாணவர்கள் படித்தார்கள். என் மகனோடு படித்த மற்ற மாணவர்களை விசாரித்தால் அன்று பள்ளி இருந்ததா அன்று வாத்தியார் திட்டினாரா என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

9) போலிசார் என்னை 25.09.2012 அன்று பட்டுக்கோட்டை அரசு மருத்துவமணையில் இருக்கும்போது விசாரித்தார்கள். மேலும் காவேரி மருத்துவமணைக்கு மறுநாள் 26.09.2012 அன்று 11.30 மணிக்கு வந்து விசாரித்தார்கள். என்னைஇரண்டு முறை இந்த வழக்கில் போலிசார் விசாரித்தார்கள்என்றால் சரிதான்.

10) இந்த இரண்டு முறை போலிசார் என்னை விசாரித்தபோது இந்த இங்கிலிஸ் வாத்தியார்

செல்வராஜ் திட்டியதாக நான் சொல்லி உள்ளேனா என்றால் சொன்னேன். போலிசார் முழுபெயரும் எழுதவில்லை. இன்சியலை மட்டும் எழுதி உள்ளார்கள்.

11) செல்வராஜ் வாத்தியார் பட்டுக்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைபள்ளியில் பணிபுரிந்து பல ஆண்டுகளுக்கு முன்பு இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பே பணி ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான்.

12) இந்த செல்வராஜ் வாத்தியாரை பற்றி மாணவர்களை திட்டினார் என்றும் இதுபோல் சம்பவம் நடந்ததாக எதுவும் இல்லை என்றால் சரிதான்.

13) போலிசார் என்னை விசாரிக்கும் போது பள்ளியில் இருந்து மாலை வந்தபிறகு என் மகன் பார்ப்பதற்கு ஒரு மாதிரியாக இருந்தான் என்றும் நான் அவனை என்னவென்று விசாரித்தேன் என்று விசாரணையில் சொல்ல வில்லை என்றால் சரியல்ல. சொல்லிஉள்ளேன்.

14) வாத்தியார் நீ படிக்க லாயக்கல்ல, நீ போய் சாவுடா என்று சொன்ன விபரத்தை போலிசார் விசாரித்தபோது நான் சொல்ல வில்லை என்றால் சரியல்ல. சொல்லிஉள்ளேன்.

15) அவன் நண்பர்கள் எல்லாரும் சிரித்துவிட்டார்கள் என்றும் அவனுடன் படிக்கும் மாணவர்கள் அவனுடன் பேசவேண்டாம், பழகவேண்டாம் என்று சொல்லி இருக்கிறார்கள் முதல் விசாரணையில் சொல்லி உள்ள விபரத்தை போலிசார் விசாரிக்குமபோது சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லி உள்ளேன்.

16) நான் அவனிடம் நாளைக்கு பள்ளிக்கூடத்தில் வந்து பேசுகிறேன் என்று சொன்னான்

என்றும் அதற்கு அவர் நீங்க போங்கப்பா நான் பார்த்துகொள்கிறேன் என்று சொன்னான் என்றும் என் மனைவியிடம் அவனுக்கு டீ போட்டு கொடுக்க சொல்லிவிட்டு பக்கத்தில் உள்ள பேப்பர் கப் கம்பெனிக்கு நான் போய்விட்டேன் என்று நான் சொன்ன விபரத்தை போலிசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரிதான்.

17) நீதிபதி வந்து என் மகனிடம் மரண வாக்குமூலம் வாங்கினார் என்று போலிசார் விசாரிக்கும்போது சொல்லி உள்ளேனா என்றால் போலிசார் அங்கு இருந்ததால் நான் சொல்லவில்லை.

18) நீதிபதி என் மகனிடம் மரண வாக்குமூலம் வாங்கினார்கள் என்று நான் சொல்வது பொய் என்றும் அவர் வந்து மரண வாக்குமூலமே வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

19) அரசு மருத்துவமணையில் வாக்குமூலம் வாங்கவில்லை என்றும் அவ்வாறு வாங்கும் போது நீதிபதி உடன் இருந்ததாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

20) மறுநாள் 26.09.2012 அன்று காலை 10.50 மணிக்கு இறந்துவிட்டான் என்றும் இறப்பதற்கு முன்பு என்னிடம் என் மகன் வாத்தியாரை விட்டுவிடாதிங்க அவர்தான் பிரச்சினை அவர் என்னை சாக சொன்னார் அதனால்தான் நான் செத்தேன் என்றும் இதுபோல் வேறு யாருக்கும் நடக்ககூடாது என்று சொன்னான் என்ற விபரத்தை போலிசார் விசாரிக்கும்போது சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. அந்த மனநிலையில் நான் சொல்லவில்லை.

21) நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அன்று லாரல் பள்ளி இயங்கவில்லை என்றும் வாத்தியார் திட்டியதால் தான் என் மகன் இறந்தான் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்